



புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351







## ஜூன் 5ஆம் தேதி புதுக்கோட்டையில் முதல்வருக்கு பாராட்டு விழா

# ஆலோசனை

## பந்தல் அமைக்கும் பணிகளை பார்வையிட்ட ஆறு பேர் கொண்ட அமைச்சர்கள் குழு ஜல்லிக்கட்டு ஆர்வலர்களுடனும் ஆலோசனை ஈடுபட்டனர்.

புதுக்கோட்டை , மே. 30–

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு ஜல்லிக்கட்டு போட்டி தீர்ப்பில் வெற்றி கிடைத்ததையொட்டி அடுத்த மாதம் அவருக்கு நடைபெறும் பாராட்டு விழா தொடர்பான ஆலோசனை கூட்டம் நேற்று புதுக்கோட்டையில் நடைபெற்றது.



தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்த உச்சநீதிமன்றம் சாதகமான தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் ஜல்லிக்கட்டு பேரவை சார்பாக தமிழக முதலமைச்சருக்கு புதுக்கோட்டையில் வருகின்றஜீன்ஐந்தாம்தேதி பாராட்டு விழா நடத்த திட்டமிட்டுள்ளனர். விழா நடைபெறும் இடத்தை நேற்று தமிழக அமைச்சர்கள் கேஎன்.நேரு, ரகுபதி, மூர்த்தி,மெய்யநாதன், உள்ளிட்ட ஆறு பேர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். ஆய்வுக்கு பின்னர் தமிழக முதல்வருக்கு புதுக்கோட்டையில் பாராட்டுவிழா நடத்துவது பெருமைக்குரிய விஷயம் என்றும் ஜல்லிக்கட்டு போட்டியில் வலுவான சட்டபோராட்டம்நடத்தி சாதகமான தீர்ப்பை தமிழக முதலமைச்சர் பெற்று கொடுத்ததால் அவர்களுக்கு பாராட்டு விழா நடத்துவதாகவும் இந்த விழாவில் ஒரு லட்சம் பேர் பங்கேற்க உள்ளதாகவும் அமைச்சர்கள் கூட்டாக பேட்டி அளித்தனர்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்த தடை விதிக்க முடியாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்த நிலையில் இந்த விவகாரத்தில் தமிழக அரசு சட்ட வல்லுநர்களை கொண்டு வலுவான வாதங்களை முன்வைத்து வெற்றி பெற்றுள்ளதாகவும் இதற்கு தமிழக முதலமைச்சரின் வழிகாட்டுதலே காரணம் எனவும் அதற்காக வருகின்ற 5ம் தேதி புதுக்கோட்டை பாலன் நகரில் ஜல்லிக்கட்டு பேரவை சார்பில் பாராட்டு விழாவும்நடத்த உள்ளனர். அதற்கான பந்தல் அமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைப்பெற்று வருகின்றது.

தமிழக நகர்ப்புற மேம்பாட்டு துறை அமைச்சர் கே.என் நேரு, வணிகவரித்துறை அமைச்சர் மூர்த்தி, சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன்,கால்நடை மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் மற்றும் ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் ராஜசேகரன் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர்கள் நேரு,மூர்த்தி, ரகுபதி மற்றும் ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் ராஜசேகரன் ஆகியோர் கூறுகையில்: மதுரையில் ஏற்கனவே பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று விட்டதாலும், தமிழகத்திலேயே அதிக ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும் மாவட்டமாக புதுக்கோட்டை திகழ்வதாலும் இந்த பாராட்டு விழாவை புதுக்கோட்டையில்நடத்த திட்டமிட்டுள்ளோம் இந்த விழாவில் ஒரு லட்சம் பேர் பங்கேற்று முதல்வருக்கு வாழ்த்து தெரிவிக்க உள்ளனர்.

இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க விழா என்றும் மதுரை ஜல்லிக்கட்டுக்கு பெயர் பெற்ற ஊர் என்றாலும் அங்கு ஜல்லிக்கட்டு தீர்ப்பின் வெற்றி விழாவை கொண்டாட இருப்பதாகவும் தற்போது புதுக்கோட்டையில் பாராட்டு விழாவை நடத்துவதற்கு தமிழக முதலமைச்சர் ஒப்புதல் வழங்கி உள்ளது தங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாகவும் அமைச்சர்கள் தெரிவித்தனர். அதனை தொடர்ந்து மாலையீட்டில் உள்ள கற்பக விநாயகா மண்டபத்தில் மேற்கண்ட 6 அமைச்சர்கள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் புதுக்கோட்டை மாவட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் புதுக்கோட்டை உள்ளிட்ட தென் தமிழகத்தில் உள்ள ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் காளை வளர்ப்போர், மாடு பிடி வீரர்கள் உள்ளிட்ட ஏராளமான பங்கேற்று தங்களது ஆலோசனைகளை வழங்கினர்.

## பொன்னமராவதி பகுதிகளில் பகுதிநேர நியாயவிலைக் கடைகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்து உணவுப் பொருட்களை வழங்கினார்

பொன்னமராவதி, மே.30–

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி ஒன்றியம், அரசமலை ஊராட்சி, மதியாணி மற்றும்திருமயம்ஒன்றியம், நச்சாந்துப்பட்டியில், பகுதிநேர நியாயவிலைக் கடைகளை, சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி நேற்று திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சிரம்யாதலைமையில் நடைபெற்றது. பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது;



தமிழ்நாடுமுதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற திட்டப் பணிகளை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி பொதுமக்களுக்கு தேவையான இடங்களில் புதிய நியாயவிலைக் கடைகள் திறந்து வைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம்பொதுமக்கள் வீண் அலைச்சலை தவிர்ப்பதுடன், தரமான உணவுப் பொருட்களை தங்களது இல்லங்களுக்கு அருகிலேயே பெற்றுக்கொள்ளும் வசதி ஏற்படுகிறது. மதியாணி முழுநேர தாய் அங்காடியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ள மதியாணி பகுதிநேர அங்காடியானது 172 குடும்ப அட்டைகளுடன் பிரதிவாரம் புதன் மற்றும் சனிக்கிழமை மட்டும் இயங்கும் வகையில் மதியாணி கிராம மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் கோட்டூர் தாய் அங்காடியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ள நச்சாந்துப்பட்டி அங்காடியானது இரண்டாவது பகுதிநேர அங்காடியாகும். இதில் 160 குடும்ப அட்டைகளுடன் பிரதிவாரம் புதன்கிழமை மட்டும் இயங்கும் வகையில் நச்சாந்துப்பட்டி கிராமமக்களுக்காகதிறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறந்து வைப்பதன் மூலம் மழை, வெயில் போன்ற இயற்கை சீற்றம் உள்ள காலங்களிலும் பொதுமக்கள் தங்களது வீட்டின் அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பகுதிகளில் உள்ள பொதுமக்கள் அனைவரும்தங்களுக்கான உணவுப் பொருட்களை தங்களது கிராமத்திலேயே பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார். பின்னர் திருமயம் ஒன்றியம், நச்சாந்துப்பட்டியில், 26 நரிக்குறவர் சமூக மக்களுக்கு பழங்குடியினர் ஜாதி சான்றிதழ்களை, அமைச்சர் ரகுபதி வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கோ.இராஜேந்திரபிரசாத், வருவாய்கோட்டாட்சியர் முருகேசன், பொன்னமராவதி ஒன்றியக்குழுத் தலைவர் சுதா, அடைக்கலமணி, அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் மேகலாமுத்து, துணைப் பதிவாளர்கள், சதீஸ்குமார், ஆறுமுக பெருமாள், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் முத்து, கூட்டுறவு சார்பதிவாளர் கோ.அன்னலெட்சுமி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதியழகன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் பழனிவேல், சிதம்பரம், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## தமிழக அரசை கண்டித்து புதுக்கோட்டையில் அதிமுக ஆர்ப்பாட்டம்



▶ தமிழ்நாட்டில் சட்ட ஒழுங்கு சீர்கேடுகளை கட்டுப்படுத்த தவறிய தமிழக அரசை கண்டித்து புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சரும், விராலிமலை சட்டமன்ற உறுப்பினருமான விஜயபாஸ்கர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஊழல், கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்கள் இறப்பு, கொலை, கொள்ளை, வழிப்பறி, போதைப் பொருள் பழக்கம், சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளை கட்டுப்படுத்த தவறிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவி விலக வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தமிழ்நாடு அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர். தெற்கு மாவட்ட செயலாளர் வைரமுத்து உள்ளிட்ட மாநில,மாவட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றிருந்தனர்.

## ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த மல்யுத்த வீராங்கனைகளுக்கு அனுமதி இல்லை டெல்லி போலீஸ்

புதுடெல்லி , மே. 30–

போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மல்யுத்த வீரர், வீராங்கனைகளுக்கு இனி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று டெல்லி போலீசார் தெரிவித்துள்ளனர். மேலும், வரும் நாட்களில் போரட்டத்துக்கு அவர்கள் அனுமதி கேட்டால், ஜந்தர் மந்தர் தவிர வேறு இடத்தில் அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவித்தனர்.



இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவரும், பாஜக எம்.பி.யுமான பிரிஜ் பூஷண் சிங் மீது மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் குற்றச்சாட்டை முன்வைத்துடெல்லிஜந்தர் மந்தரில் ஏப்ரல் 23-ம் தேதி முதல்போராட்டம்நடத்தி வந்தனர். கிட்டத்தட்ட ஒரு மாத காலமாக நடைபெற்று வரும் இப்போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். பிரிஜ் பூஷன் சிங்கை கைது செய்யும் வரை போராட்டம் தொடரும் என்று மல்யுத்த வீரர்கள் தெரிவித்தனர். மல்யுத்த வீரர்களின் இந்தப் போராட்டத்தில் விவசாயிகளும் இணைந்து போராடி வருகின்றனர்.

இதனிடையே, ஞாயிற்றுக்கிழமை புதிய நாடாளுமன்றம் திறக்கப்பட இருந்த நிலையில், வினேஷ் போகத், சாக்சி மாலிக், பஜ்ரங்பூனியா உள்ளிட்ட வீரர், வீராங்கனைகள் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். ஆனால், அவர்களை டெல்லி போலீஸார் வழியிலேயே தடுத்து நிறுத்தினர். பாதுகாப்பு தடுப்புகளை தாண்டி அவர்கள் செல்ல முயன்றதால், போலீஸாருக்கும், வீரர், வீராங்கனைகளுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பின்னர் போலீஸார் அவர்களை பேருந்தில் ஏற்றி வேறு இடத்துக்கு அழைத்துச் சென்று தங்கவைத்தனர்.

புதிய நாடாளுமன்றம் நோக்கி அணிவகுப்பு நடத்த முற்பட்ட மல்யுத்த வீராங்கனைகள் மற்றும் வீரர்கள்மீதுடெல்லிகாவல் துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.இதுகுறித்து டெல்லி போலீசார் “பஜ்ரங் பூனியா, வினேஷ் போகத், சாக்சி மாலிக் மற்றும் போராட்டத்தை ஒருங்கிணைத்தவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிலர் ஜந்தர் மந்தருக்கு போராட்டம் நடத்த மீண்டும் வந்தனர். அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மேலும், அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்” என்றுதெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், மல்யுத்த வீராங்கனைகள் இனி ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று டெல்லிபோலீசார் நேற்று தெரிவித்துள்ளனர். இது குறித்து டெல்லி காவல் துறை இணை ஆணையர் (டிசிபி) ட்விட்டர் பக்கத்தில் இந்தியில் வெளியிட்டுள்ள பதிவில், "டெல்லி ஜந்தர் மந்தரில் அனுமதிக்கப்பட்ட இடத்தில் மல்யுத்த வீரராங்கனைகளின் போராட்டம் அமைதியாக நடந்து வந்தது. உள்ளிருப்பு போராட்டம் இதுவரை அமையதியான முறையில் நடந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனைத்து கோரிக்கைகளையும் மீறு நேற்று வெறித்தனமாக நடந்து கொண்டனர். அதனால் அவர்களின் போராட்டம் தடுத்து நிறுத்தப்பட்டது.

இனிவரும் நாட்களில் அவர்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்த அனுமதி கோரினால், அவர்களுக்கு ஜந்தர் மந்தர் தவிர வேறு பொருத்தமான இடத்தில் போராட்டம் நடத்த அனுமதி வழங்கப்படும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, செய்தி நிறுவனம் ஒன்றிடம் பேசிய ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற வீராங்கனை சாக்ஷி மாலிக், "அனைத்தும் வீடியோவில் பதிவாகியிருக்கிறது. ஒரு மல்யுத்த வீராங்கனையை 20 – 30 காவலர்கள் தடுத்து நிறுத்தும் போது நாங்கள் எப்படி வன்முறையில் ஈடுபட்டிருக்க முடியும். நாங்கள் அவர்களிடம் எங்களை அப்புறப்படுத்தாதீர்கள் என்று சொல்ல முயன்றோம். எங்களின் கோரிக்கைகளை யாரும் கேட்காததால் நாங்கள் அமைதியான முறையில் பேரணி செல்ல முயன்றோம்.

ஆனால், அவர்கள் எங்களை வலுக்கட்டாயமாக பேருந்துக்குள் தள்ளினர். அதனால் எங்கள் உடல்களில் சிராய்ப்புகள் ஏற்பட்டன. நாங்கள் எந்தக் கலவரத்திலும் ஈடுபடவில்லை, எந்தப் பொதுச் சொத்தையும் சேதப்படுத்தவில்லை, எந்தத் தடுப்புகளையும் தள்ளவில்லை. முதல் நாளில் இருந்தே நாங்கள் அமைதியான முறையில்தான் போராடி வருகிறோம். எங்களைப் போக அனுமதிக்குமாறு நாங்கள் காவலர்களிடம் வேண்டுகோள் விடுத்தோம். ஆனால், எங்களை அனுமதிக்கவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

கைது நடவடிக்கையைத் தொடர்ந்து டெல்லி போலீசார் ஜந்தர் மந்தரில் ஒரு மாதகாலத்துக்கும் மேலாக போராட்டம் நீடித்த இடத்திலிருந்து அனைத்துப் பொருள்களையும் அப்புறப்படுத்தினர். மேலும், டெல்லி முழுவதும் 700 பேர் கைது செய்யப்பட்டதாகவும், மூன்று மல்யுத்த வீராங்கனைகள் உட்பட 109 பேர் ஜந்தர் மந்தரில் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும், கைது செய்யப்பட்ட பெண்கள் மாலையில் விடுவிக்கப்பட்டனர் என்றும்டெல்லிபோலீசார் தெரிவித்திருந்தனர்.

## வட சென்னை மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு மக்கள் மருத்துவர் ஜெயசந்திரன் பெயர் வைக்க சொல்லி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

சென்னை, மே. 30–

சென்னை வண்ணாரப்பேட்டையில் வசித்து வந்தவர் அஞ்சு ரூபாய் டாக்டர் என்று அனைவராலும் அழைக்கப்பட்ட மக்கள் மருத்துவர் டாக்டர் ஜெயச்சந்திரன் ஆவார், இவர் வடசென்னை பகுதியில் பல்லாயிரம் கணக்கானோருக்கு இலவசமாகவும் ஐந்து ரூபாய்வாங்கிக்கொண்டும் இலவச மருத்துவ சேவை செய்து வந்தார்.

மேலும் கிட்டத்தட்ட 10க்கும் மேற்பட்ட மருத்துவ முகாம்களும் இவர் நடத்தியுள்ளார். இவர் இந்த வட சென்னை மக்களுக்காக பல்வேறு போராட்டங்களை இவர் தலைமையில் நடந்தியுள்ளார். இதில் முக்கியமாக வண்ணாரப்பேட்டை வரை செயல்பட்டு வந்த மெட்ரோரயில்திட்டத்தை விம்கோ நகர் வரை கொண்டு வருவதற்கான முயற்சியை இவரின் போராட்டம்வாயிலாகவே அமைந்தது, பின்னர் அரசு அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு விம்கோ நகர் வரை மெட்ரோ ரயில் திட்டத்தை நீடித்து உத்தரவிட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.



இந்த நிலையில் மக்கள் மருத்துவர் இறந்ததை தொடர்ந்து ,அவரின் நினைவாக ஏதாவதுஒருமெட்ரோரயில் நிலையத்திற்கு அவரின் பெயரை சூட்ட வேண்டும் என்று வடசென்னை சேர்ந்த பல்வேறு அமைப்புகளும்,ஜாதி மதம் கடந்து அனைத்து அரசியல் கட்சிகளும் எம். எல்.ஏ க்கள் உட்பட பலர் நீண்டநாட்களாகஅரசுக்கு கோரிக்கையை வைத்து வருகிறார்கள்.

இது குறித்து தமிழக வாழ்வுரிமை கட்சி நிறுவனரும் சட்ட மன்ற உறுப்பினர் வேல்முருகன் சட்டசபையில் கோரிக்கை வைத்தார். தற்போது போராட்ட குழுவினர் மீண்டும் வடசென்னையில் உள்ள ஏதாவது மெட்ரோ ரயில் நிலையத்திற்கு பெயர் வைக்க வேண்டும், இவர் பெயரில் ஒரு மணி மண்டபமும், ஏதாவது ஒரு சாலைக்கு இவர் பெயரை வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து மீண்டும் அனைவரும் ஒன்றிணைந்து கவன ஈர்ப்பு போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

இந்தபோராட்டத்தை வடசென்னை மக்கள் மேம்பாட்டு அறக்கட்டளை சார்பில் இந்திய மீனவர் சங்கம் முன்னெடுத்து வடசென்னையில் உள்ள சுமார் 80 க்கும் மேற்பட்ட அமைப்புகள் ஒன்றிணைந்து சென்னை கலெக்டர் அலுவலகம் அருகே மத்திய ,மாநில அரசுகளுக்கு தெரியும் வகையில் கவன ஈர்ப்பு போராட்டம் இன்று காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. இந்த போராட்டத்தில் மக்கள் மருத்துவர் டாக்டர் ஜெயச்சந்திரன் குடும்பத்தார் மற்றும் தயாரிப்பாளர் நடிகர் கே ராஜன், கிங் பிஷ் எம்.டி.தயாளன் ,எம். கே.பாபுசுந்தரம் ,எஸ். வன்னிய ராஜன் ,எம்.இ.ராஜா,ஏ.வி.எஸ். மாரிமுத்து, கவிஞர் ராமலிங்கம்ஜோதி உட்பட ஏராளமானோர் இதில் கலந்துகொள்ள உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது இந்த போராட்டம் வாயிலாக மறைந்த மக்கள் மருத்துவர் ஜெயச்சந்திரனுக்கு அரசு சார்பில் இவர்களின் கோரிக்கையை நிறைவேற்றிதருவார்களா? என வடசென்னை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# இன்று

**30-5-2023**

பிரண்டை துவையல் பசியை தூண்டும்
சக வருடம் 1945 ஜ்யேஷ்டம் 09

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது வைகாசி 16 | MAY - TUE செவ்வாய் | துல்க.ஃதா 9 வளர்பிறை 150 / 215 | இராசிபலன் |

வளர். தசமி 13.49 (கா. 11.24) ஹஸ்தம் 56.41 (கா. 04.32) தியாஜ் 15.19 அகல் 31.22 சித்த. கரிநாள். காளையார்கோவில் சிவ பெருமான் பொய்ப் பிள்ளையை மெய்ப்பிள்ளையாக்கும் காட்சி. திருவாடானை ஸ்ரீசுவாமி இந்திர விமான பவனி. சோழவந்தான் ஜனகமாரியம்மன் பந்தடம். பாபஹர தசமி.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 7.30-8.30 | 10.30-11.30 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை | 4.30-5.30 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; ரிஷப லக்னம் இருப்பு நா. 2 வி. 31; சந்திராஷ்டமம் பூரட்டாதி; கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 5.52

சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடி

இராசிபலன்: மேஷம் - பயணம்; ரிஷபம் - நன்மை; மிதுனம் - ஆதாயம்; கடகம் - செலவு; சிம்மம் - மேன்மை; கன்னி - விவேகம்; துலாம் - பொறுமை; விருச்சி - நிம்மதி; தனுசு - தெளிவு; மகரம் - சுபம்; கும்பம் - உயர்வு; மீனம் - பாராட்டு

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

உன்னை வீழ்த்தும் அளவிற்கு
விதிகள் எழுதப்பட்டிருந்தால்,
விதிகளை வீழ்த்தும் அளவிற்கு
வழிகளும் நிறுவப்பட்டிருக்கும்!
தளறாதே!
துணிந்து செல்!




## சங்கரன்கோவிலுக்கு வருகை தந்த சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதனுக்கு உற்சாக வரவேற்பு



சங்கரன்கோவில் மே 30

சங்கரன்கோவிலுக்கு வருகை தந்த சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதனுக்கு வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா தலைமையில் உற்சாக வரவேற்பு.

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவிலில் முன்னாள் முப்படை வீரர்கள் சங்கத்தின் மாநில அளவிலான மாநாட்டிற்கு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மற்றும் முப்படை வீரர்கள், நலத்துறை அமைச்சர் மெய்யநாதன் சங்கரன்கோவிலுக்கு வருகை புரிந்தார். சங்கரன்கோவில் வந்த அவருக்கு திருவேங்கடம் சாலை வட்டாட்சியர் அலுவலகம் அருகே வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சங்கரன்கோயிலின் மிக முக்கிய பிரதான தொழிலாளர் விசைத்தறியை நினைவூட்டும் வகையில் அமைச்சருக்கு வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா விசைத்தறியில் நெய்யப்பட்ட ஆடைகளை வழங்கினார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் சீனிவாசன், மாவட்ட அவை தலைவர் பத்மநாபன் ,மாவட்ட துணைச் செயலாளர் புனிதா, ராஜதுரை, மனோகரன், மாவட்ட பொருளாளர் சரவணன், ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், கிறிஸ்டோபர், கடற்கரை, சேர்மதுரை, ராமச்சந்திரன், பெரியதுரை, பூசைபாண்டியன், நகராட்சி சேர்மன் உமா மகேஸ்வரி சரவணன், நகர செயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ் ,புளியங்குடி அந்தோணிசாமி, பொதுக்குழு உறுப்பினர் மகேஸ்வரி, மாவட்ட பிரதிநிதி செய்யது அலி, நகர துணை செயலாளர் மாரியப்பன், மாணவர் அணி உதயகுமார், கார்த்தி ,அப்பாஸ்அலி, வக்கீல்கள் கண்ணன், ஜெயக்குமார், சதீஷ், வார்டு செயலாளர்கள் வீராசாமி, வீரமணி, சிவா ,கோமதிநாயகம், நகராட்சி கவுன்சிலர்கள் ராமு, செல்வராஜ் ,தலைவன்கோட்டை கூட்டுறவு வங்கி தலைவர் விஜயபாண்டியன், செல்வம் ,பிரகாஷ், வெங்கடேஷ், கணேஷ் ,ஜெயக்குமார், சிவாஜி, விக்னேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## செங்கோட்டை நூலகத்தில் மத்திய அரசு போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகளை கலெக்டர் துவக்கி வைத்தார்



தென்காசி மே 30

தென்காசி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை நூலகத்தில் - நான் முதல்வன் திட்டம் வாயிலாக மத்திய அரசு போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் துவங்க உள்ளதாக கலெக்டர் துரை.இரவிச்சந்திரன் துவக்கி வைத்தார். நான் முதல்வன் திட்டம்" வாயிலாக சுமார் 150 மாணவர்களுக்கு மத்திய தேர்வாணையம் நடத்தும் போட்டித்தேர்வுகளுக்கு தென்காசி கலெக்டர் தலைமையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் ரூபவ் வாயிலாக செங்கோட்டை முழு நேர நூலகத்தில் நேற்று காலை 10.00 மணி முதல் முற்றிலும் இலவசமாக பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதற்கான துவக்க விழா நடைபெற்றன.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் தலைமையுரையாற்றினார். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஷீ.ரா.ரம்யா வரவேற்புரையாற்றினார். என்.மயிலேறு பெருமாள் பணி நிறைவு, மத்திய அரசுப்பணி இயக்குநர் சிறப்புரையாற்றினார். கோ.ராமசாமி நூலகர் நன்றிரையாற்றினார். மேலும் இப்பயிற்சி வகுப்புகளில் 150 போட்டியாளர்கள் அனைவரையும் தேர்வில் வெற்றி பெற கலெக்டர் துரை.இரவிச்சந்திரன் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இத்துவக்க விழாவில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ரம்யா செங்கோட்டை, வட்டாரா நூலக அலுவலர் ராமசாமி, ஓய்வு பெற்ற செயலாளர் மயிலேறு பெருமாள் மற்றும் அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டனர்.




### நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில்

## ஆரம்ப சுகாதார நிலையங்களில் அமைச்சர் திடீர் ஆய்வு



நாமக்கல் மே 30

நாமக்கல் மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் நாமக்கல் மாவட்டத்திற்கு வந்தார். அவர் திருச்செங்கோட்டில் உள்ள அரசு மருத்துவமனையில் சிடி ஸ்கேன், சீதாராம் பாளையம் நகர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம் உட்பட பல்வேறு திட்ட பணிகளை தொடங்கி வைத்தார். நேற்று காலை கொல்லிமலையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.

இதையொட்டி கொல்லிமலை சென்ற அமைச்சர், நேற்று காலை அங்கு நடைபயிற்சி மேற்கொண்டார். அப்போது, கொல்லிமலை வட்டம், சோளக்காடு- புதுவளவு நலவாழ்வு மையம் மற்றும் இலக்கியம்பட்டி நலவாழ்வு மையத்தில் அமைச்சர் சுப்பிரமணியன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவமனைக்கு நோயாளிகள் வருகை மற்றும் அவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து அங்கிருந்த மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். தொடர்ந்து மருந்து, மாத்திரைகள் இருப்பு குறித்தும் ஆய்வு செய்த அவர், நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். அமைச்சர் திடீரென ஆய்வுக்கு வந்த சம்பவம், ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர்களிடம் பரபரப்பை ஏற்படுத்தியது.

## அறந்தாங்கி தொகுதிக்கு உட்பட்ட ஜெகதாபட்டினம், கோட்டைப்பட்டினம் பகுதிகளில் அமைச்சர்கள் ஆய்வு



அறந்தாங்கி,மே.30-

மீன்வளத்துறை மற்றும் கால்நடைத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ .வீ. மெய்யநாதன் ஆகியோர் ஜெகதாப்பட்டினம், கோட்டைப்பட்டினம், புதுக்குடி, வடக்கு அம்மாபட்டினம்போன்ற பகுதிகளில் உள்ள மீனவப் பிரதிநிதிகளை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டு அறிந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதிக்கு உட்பட்ட ஜெகதாபட்டினம், கோட்டைப்பட்டினம் தெற்கு புதுக்குடி, வடக்கு புதுக்குடி வடக்கு அம்மாபட்டினம் போன்ற பகுதியில்உள்ளவிசைப்படகு மீனவர்களையும் நாட்டு படகு மீனவர்களையும் சந்தித்து அவர்களுக்கு என்னென்ன குறைகள் உள்ளதுஎன்றுகேட்டறிந்து அதைநிவர்த்திசெய்வதாக அமைச்சர்உறுதிஅளித்தார் அவருடன் மாவட்ட வருவாய் அதிகாரி செல்வி, மணமேல்குடி ஒன்றிய பெருந்தலைவர், பரணி கார்த்திகேயன் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள், வருவாய் துறை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



▶ காரைக்காலை அடுத்த நெடுங்காடு ஜவகர்லால் நேரு அரசு பள்ளியில் 1992-ஆம் வருடம் 10-ம் வகுப்பு படித்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்வு நெடுங்காடு நாகம்மை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் ஆசிரியர்களை அழைத்து கவுரவிக்கப்பட்டது. மறைந்த முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. 31 வருடங்களுக்கு பின்னர் நடைபெற்ற இன்நிகழ்வு என்பதால் முன்னாள் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். விழாவின் நிறைவில் படித்த பள்ளியை மேம்படுத்தவும் இப்பள்ளி மாணவர்களின் கல்வியின் தரத்தை உயர்த்தவும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டது.

### தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2023-2024-ஆம் ஆண்டிற்கான

## உறுதிமொழி குழு மதுரை மாவட்டத்தில் இன்று ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளது

மதுரை, மே. 30-

மதுரை மாவட்டத்தில் சட்டமன்றப் பேரவையின் 2023-2024-ஆம் ஆண்டிற்கான உறுதிமொழி குழு இன்று காலை குழு தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் தலைமையில், சட்டமன்ற குழு உறுப்பினர்கள் மதுரை மாவட்டத்தில் அரசுத்துறைகளின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து ஆய்வுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்கள். மேலும் மாலையில் கலெக்டர் அலுவலகத்தில் அனைத்துத் துறை அலுவலர்கள் உடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் சட்டமன்றப் பேரவையின் 2023-2024-ஆம் ஆண்டிற்கான உறுதிமொழி குழு தலைவர் / சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் தலைமையில், குழு உறுப்பினர்களாக உள்ள சட்டமன்றஉறுப்பினர்கள் கே.அண்ணாதுரை, ஆர். அருள், ஐ.கருணாநிதி,எம். சக்கரபாணி, எம். பழனியாண்டி,ஆர்.மணி , ரூபி ஆர்.மனோகரன் ,எம்.கே.மோகன் ,பி. ராமலிங்கம் , ஏ.சி. விஸ்வநாதன், எஸ். ஜெயக்குமார் ஆகியோர் பங்கேற்க உள்ளார்கள் என கலெக்டர் மா.சௌ. சங்கீதா தெரிவித்தார்.

## குற்றாலம் நன்னகரத்தில் புதிய பாராளுமன்ற கட்டிட திறப்பு விழாவில் குடியரசுத் தலைவரை புறக்கணித்ததை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தென்காசி மே 30

தென்காசி மாவட்டம்- குற்றாலம் நன்னகரத்தில் அம்பேத்கர் சிலை அருகே புதிய பாராளுமன்ற கட்டிட திறப்பு விழாவிற்கு பழங்குடி இனத்தை சார்ந்தவரான இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களை புறக்கணிக்கும் விதமாக தொடர்ந்து பழங்குடியின, பட்டியலில் இன மக்களை புறக்கணிக்கும் பாசிச பாஜக மோடி அரசை கண்டித்து எஸ்சி,எஸ்டி பிரிவு கலெக்டர் ராமச்சந்திரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி, சர்புதீன், காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாடசாமி, பொதுச் செயலாளர் காஜா, சபரி முருகேசன், சந்தோஷ், மாவட்ட செயலாளர் கண்ணன், ஜேம்ஸ், பொருளாளர் ஈஸ்வரன், துணைத் தலைவர் தேவராஜன், கதிர்வேல், தென்காசி தொகுதி இளைஞர் பிரேம்குமார், வழக்கறிஞர் பிரிவு சீதா, சங்கர குமார், உதயகிருஷ்ணன், கணேசன், சுரேஷ், ரமேஷ், மாடசாமி, அன்னக்கிளி, அபுதாஹீர் நகரத் தலைவர் கடையநல்லூர், புஷ்பராஜ் திலகம் துணைத் தலைவர், வெங்கடேஷ் ஊடகத்துறை தலைவர், தாவி மாவட்ட பொருளாளர், பரமசிவன் மாவட்ட துணை தலைவர், கருத்தப் பாண்டி இளைஞர் அணி தலைவர், ஹரிஹரன் துணைத் தலைவர், மகேந்திரன் செயலாளர், கோடீஸ்வரன் ஆலங்குளம் தொகுதி தலைவர், வேலுச்சாமி சங்கரன்கோவில் தொகுதி தலைவர், சங்கர பாண்டி, ஈஸ்வரன் செங்கோட்டை வட்டாரம், அசோக்குமார் கடையநல்லூர் துணைத்தலைவர், முத்துராஜ் கடையநல்லூர் வட்டார தலைவர், ஆறுமுகச்சாமி செங்கோட்டை வட்டார துணைத்தலைவர், கார்த்தி, சலீம், அப்துல் மஜீத், சுப்புராஜ், ஆரிப், தென்காசி மாவட்ட மகளிர் தலைவி சேர்மக்கனி, வெள்ளையம்மாள், சங்கர் ரதி, பொன்னுத்தாய், செல்லம்மாள், புஷ்பா, வசந்தா, திருமலைச்செல்வி, மகேஸ்வரி, சுசீலா, ஆகியோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## டெல்லியில் 16 வயது சிறுமிக்கு 20 முறை கத்திக் குத்து படுகொலையை வேடிக்கைப் பார்த்த பொதுமக்கள்



புதுடெல்லி , மே. 30-

தலைநகர் டெல்லியில் 16 வயது சிறுமி ஒருவர் அவரது ஆண் நண்பரால் பலரது கண் முன்னால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட சம்பவம் நடந்துள்ளது. டெல்லியின் ரோஹிணி ஷாபாத்டெய்ரி பகுதியில் நடந்த இச்சம்பவம் ஒட்டுமொத்த தேசத்தையும் அதிர்ச்சியில் ஆழ்த்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தக் கொலையின் சிசிடிவி காட்சிகள் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. உறுதியான மனம்கொண்டோரையும் உலுக்கிவிடும் அளவுக்கு அந்தக் கொலை நிகழ்த்தப்பட்டுள்ளது.

அந்த வீடியோவில் ஒரு சிறுமியை இளைஞர் ஒருவர் கத்தியால் குத்துகிறார். அந்தச் சிறுமி சில குத்துகளிலேயே நிலைகுலைந்து அமர்ந்துவிடுகிறார். ஆனாலும், அந்த இளைஞர் விடவில்லை. அந்த இளைஞர் அப்பெண்ணை கத்தியால் திரும்பத் திரும்ப குத்துகிறார். ஒரு கட்டத்தில் கத்தி அச்சிறுமியின் தலையில் பாய்ந்துவிடுகிறது. அதை எடுக்கமுடியாமல் போகவே, அருகே இருந்த சிமெண்ட் ஸ்லாபை எடுத்து அச்சிறுமியை கடுமையாக தாக்கினார்.

அப்போது, அந்தப் பகுதியில் நிறைய மக்கள் நடமாட்டம் இருக்கிறது. ஆனால், யாரும் அதைத் தடுக்க முன்வரவில்லை. சிசிடிவியில் பதிவாகியுள்ள கொலை ஏற்படுத்தும் பயத்தைவிட, அதைக் கடந்து வெறும் பார்வையாளர்கள்போல் செல்லும் மனிதர்களின் செயல் மிகுந்த பதற்றத்தை அளிப்பதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

பதைபதைக்க வைக்கும் கொலையைச் செய்த நபரின் பெயர் ஷாஹில் என்பதும், சிறுமியின் பெயர் நிக்கி என்பதும் தெரியவந்துள்ளது. அவரும் கொலையான சிறுமியும் பழகிவந்துள்ளனர். கொலைக்கு ஒருநாள் முன்னர்தான் இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், ஷாஹிலின் நண்பரின் குழந்தைக்கு பிறந்தநாள் விழா நடந்தது. அதில், கலந்துகொள்வதற்காக நிக்கி செல்லும் வழியில் அவரை வழிமறித்து ஷாஹில் கொலை செய்துள்ளார்.

கொலைக்குப் பின்னர் தலைமறைவான ஷாஹிலை போலீஸார் தேடி வந்த நிலையில் அவர் உத்தரப் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது ஐபிசி 320 பதிவு செய்யப்பட்டுள்ளது. உயிரிழந்த சிறுமி நிக்கியின் தந்தை அளித்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

டெல்லி மகளிர் ஆணையத் தலைவர் ஸ்வாதி மலிவாலும் டெல்லி சம்பவத்துக்கு ட்விட்டரில் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார். அதில் அவர், "டெல்லி ஷாபாத் டெய்ரி பகுதியில் ஓர் அப்பாவி சிறுமி படுகொலை செய்யப்பட்டுள்ளார். வரம்பற்ற வன்முறை நிகழ்த்தப்பட்டுள்ளது. என் பணிக்காலத்தில் தான் பார்த்திராத அளவிலான வன்முறை இது"என்று கூறியுள்ளார்.

# எண்ணூரில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ரவுடி கைது



எண்ணூர்,மே,30

சென்னை எண்ணூர் கிரிஜா நகர் பகுதியில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக எண்ணூர் உதவி ஆணையர் பரமானந்தம் ரகசிய தகவல் கிடைத்தது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற உதவி ஆய்வாளர் நந்தகுமார் தலைமையில் தனிப்படை போலீசார் சென்ற போது போலீசாரை பார்த்ததும் அங்கிருந்த ஒரு நபர் கையில் வைத்திருந்த பையை தூக்கி போட்டு விட்டு தப்பி ஓடினான், பின்னர் போலீசார் விரட்டிச் சென்று பிடித்து விசாரணை செய்தபோது காசிமேடு பவர் குப்பத்தைச் சேர்ந்த கமல்ராஜ் என்கின்ற கமல் பாய் என தெரிய வந்தது இவன் மீது காசிமேடு காவல் நிலையம் காசிமேடு மீன் பிடித்துறை முகம் காவல் நிலையம் புது வண்ணாரப்பேட்டை எண்ணூர் உள்ளிட்ட காவல் நிலையங்களில் கொலை வழக்கு கொலை முயற்சி வழக்கு கஞ்சா வழக்கு இருப்பது தெரியவந்தது

அவனிடமிருந்து 1.5.கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்து வழக்குப்பதிந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்



காரைக்கால் போராளிகுழு நிர்வாகிகள் தலைவர் ஐ.அப்துல் ரஹீம் தலைமையில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கள் சந்தித்து காரைக்கால் அரசு பொது மருத்துவமனையில் சி.டி.ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் புதிதாக நிறுவ வேண்டுமெனவும், ஏற்கனவே அரசு பொது மருத்துவமனையில் இருந்த பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் பிரிவில் தற்போது காலியாக உள்ள பணியிடத்தில் தகுந்த நிபுணர்களை உடனே நியமிக்க வேண்டுமெனவும் கோரிக்கை மனு அளித்தனர். இச்சந்திப்பின் போது போராளி குழுவின் செயலாளர் எஸ்.விடுதலைக்கனல், இணைச் செயலாளர்கள் அ.ராஜா முஹம்மது, எஸ்.சிவக்குமார், உயர் மட்டக்குழு உறுப்பினர் எஸ்.யூசுப்கான் ஆகியோர் உடனிருந்தனர்.

# திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் தமிழக அரசை கண்டித்து பொன்னேரியில் கண்டன ஆர்ப்பாட்டம்





ஊத்துக்கோட்டை, மே30–

தமிழகத்தில் கள்ளச்சாராயம், போலி மதுபானங்களால் உயிரிழப்பு ஏற்படுவதை கண்டித்தும்,நாள்தோறும் கொலை,கொள்ளை, வழிப்பறி, போதை பொருட்கள் புழக்கம், மின்மிகை மாநிலமாக இருந்த தமிழகத்தை மின்வெட்டு மாநிலமாக மாற்றியது, சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, அரசு அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு நிர்வாக சீர்கேடுகளை கண்டித்தும், பல கோடி ரூபாய் ஊழல் நடந்திருப்பதாகவும், இதனால் நிதி அமைச்சரின் பதவி பறிக்கப்பட்டதாக கூறியும், தமிழக முதல்வரை பதவி விலக கோரியும் திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் பொன்னேரி பழைய பஸ் நிறுத்தம் அருகே நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு, திருவள்ளூர் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், பொன்னேரி சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான சிறுணியம் பி.பலராமன் தலைமை தாங்கினார், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.எஸ். விஜயகுமார் முன்னிலை வகித்தார். இதில்,நிர்வாகிகள் பொன்னுதுரை, ஆர். அபிராமன், சியாமளாதன்ராஜ், எஸ்.எம்.ஸ்ரீதர், ஏளாவூர் முல்லைவேந்தன், கே.எம்.எஸ்.சிவக்குமார், டேவிட்சுதாகர், ஏ.டி.நாகராஜ், எம்.எஸ்.எஸ்.சரவணன், மீஞ்சூர் எம்.மாரி, ஆரணி தயாளன், கும்மிடிப்பூண்டி எஸ்.டி.டி.ரவி, மு.க.சேகர், பா.துளசி என்ற முனுசாமி, மங்கலம் டி.வெங்கடேசன், வக்கீல் ஈஸ்வரமூர்த்தி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# திருக்களாச்சேரி சிதளா தேவி மாரியம்மன் கோவில் தீமிதி திருவிழா





தரங்கம்பாடி, மே,30–

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா திருக்களாச்சேரியில் உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீமத் சீதளா தேவி மாரியம்மன் கோவில் வைகாசி மாதம் தீமிதி திருவிழா மற்றும் தேரோட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 14-ஆம் தேதி புஷ்பா அபிஷேகத்துடன் தொடங்கிய பிறம்மோற்சவ தீமிதி திருவிழா ஞாயிற்றுக்கிழமை தீமிதி மற்றும் தேரோட்டம் நடைபெற்றது. கோவில் அருகே அமைக்கப்பட்ட தீக்குண்டம் எதிரில் அம்மன் எழுந்தருளி காட்சியளிக்க வீரசோழன் ஆற்றில் இருந்து சக்தி கரகம் புறப்பட்டு வர விரதமிருந்த ஏராளமான பக்தர்கள் மஞ்சள் உடை உடுத்தியும், பால் காவடி, 16 அடி அழகு காவடியுடன் ஊர்வலமாக வந்து தீ மிதித்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம் வழிபாடு பின்னர் அலங்கரிக்கப்பட்ட அம்மன் தேரில் எழுந்தருளி காட்சி அளிக்க தேர் வீதி உலாவும் நடைபெற்றது. இதில் அதிமுக மாவட்ட செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.பவுன்ராஜ் கலந்துகொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து துவக்கி வைத்தார். ஏராளமான பக்தர்கள் அம்மனுக்கு மாவிளக்கு மற்றும் அபிஷேகங்கள் செய்து வழிபாடு நடத்தினர். இதற்கான ஏற்பாடுகளை திருக்களாச்சேரி கிராம பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.



காரைக்கால் மாவட்ட நிர்வாகத்தின் அறிவுறுத்தலின் பேரில் காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்திற்கு உட்பட்ட மளிகை கடை, காய்கறி கடை, மற்றும் ஜூஸ் கடை, பெட்டிக்கடைகளில் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் சிவநேசன் ஆய்வு மேற்கொண்டார். தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளனவா என்பதை ஆய்வு செய்த ஆணையர் இது போன்ற பொருட்கள் விற்கக் கூடாது எனவும் மேலும் கல் வைத்து பழுக்க வைக்கும் பழங்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்யக்கூடாது எனவும் கடை உரிமையாளர்களிடம் அறிவுறுத்தினார்கள். மேலும் பொதுமக்கள் இது போன்ற தவறுகள் கடைக்காரர்கள் செய்தால் உடனடியாக எனக்கு இந்த தொடர்பு எண் 97872 03111 தகவல் தெரிவிக்கும்படியும் பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.

# விவசாயக் கல்லூரியில் கஞ்சா வளர்ப்பு: மத்திய போதைப் பொருள் தடுப்பு புலனாய்வுத் துறை விசாரணை செய்ய வேண்டும் – இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம் கோரிக்கை.

காரைக்கால், மே,30

இந்த பிரச்சினை குறித்து இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம் மாநிலத் தலைவர் டாக்டர். எஸ். ஆனந்த்குமார் அனுப்பி உள்ள புகாரில் கூறியதாவது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் காரைக்கால் மாவட்டத்தில் செருமாவிலங்கை கிராமத்தில் இயங்கி வருகிறது பஜன்கோவா என்று அழைக்கப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

இந்திய ஒன்றிய அரசு கடைபிடிக்கும் போதைப் பொருள் தீவிரவாத ஒழிப்பு கொள்கையை மதித்து இரும்புக் கரம் கொண்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் பஜன்கோவா கல்லூரி முதல்வர் புஷ்பராஜ் மற்றும் பேராசிரியர் சங்கர் ஆகியோர் கூட்டு சதி செய்து, உண்மையை அரசுக்கு தெரிவிக்காமல் கஞ்சா செடிகளை ரகசியமாக அழித்து, மோசடிக் காரணம் கூறி, கண் துடைப்பு நாடகமாடி ஏமாற்றியதற்கு அரசு உடனே அவர்களை கைது செய்ய வேண்டும் என்று கடந்த 22தேதி அன்று இந்திய ஊழல் எதிர்ப்பு இயக்கம் புகார் கொடுத்தது. ஏனென்றால் அத்தகைய செயல்கள் போதைப் பொருள் தடுப்பு சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் கீழ் குற்றச் செயல்கள்.

கல்லூரி வளாகத்திற்குள் வளர்க்கப்பட்ட கஞ்சா செடிகளின் ரகசியப் புகைப்படம் ஒன்று ஆதாரமாக உள்ளது. அதுமட்டுமல்லாமல், சிசி. டிவி பதிவுகளும் ஆங்காங்கே உள்ளன. புகாரை பெற்ற 72 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது போதை பொருள் தடுப்பு சட்டத்தின் படி விதி. சட்டம் அப்படி இருந்தும், புகாரை பெற்று கொண்ட பிறகு போதைப் பொருள் தடுப்பு புலனாய்வுத் துறை விசாரணைக்கு உடனே உத்தரவிடாமல் குற்றம் சாட்டப்பட்டவர்களை காப்பாற்றிவரும் புதுச்சேரி அரசின் உயர் அதிகார வர்க்கம் தங்களது அலட்சியத்தை உணரும் விதமாக நேற்று (28.05.2023) காரைக்கால் மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்த ஆங்காங்கே சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

ஏனென்றால், நடவடிக்கை எடுக்காமல் காட்டிய காலதாமதம் காரணமாக புகாரில் உள்ள தகவலைத் தவறாக பயன்படுத்தி எஞ்சிய ஆதாரங்களும் சாட்சிகளும் அழிக்கப்பட்டால் அது இந்திய தண்டனை சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் கீழ் குற்ற செயல்கள்.


அண்மையில் பிரதமர்மோடி மனதின் குரல் நிகழ்ச்சியில்போதைப் பொருள் தடுப்புக்கு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று பேசியது குறிப்பிடத்தக்கது. ஆனால், புதுச்சேரி ஆட்சியாளர்கள் அதற்கு மாறாக செயல்படுவதாக தற்போது தெரிய வந்துள்ளது.

எனவே, அனைத்து இளைஞர்களின் எதிர்காலம் கருதி மத்திய போதைப் பொருள் தடுப்பு புலனாய்வுத் துறை உடனே விசாரணையை தொடங்குமா என்று அக்கல்லூரியின் பல ஊழியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவியர் மற்றும் பொது மக்கள் இடையே பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. என அதில் குறிப்பிட்டு உள்ளார்.



காரைக்காலை அடுத்த நெடுங்காடு ஜவகர்லால் நேரு அரசு பள்ளியில் 1992-ஆம் வருடம் 10-ம் வகுப்பு படித்த முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்வு நெடுங்காடு நாகம்மை திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் ஆசிரியர்களை அழைத்து கவுரவிக்கப்பட்டது. மறைந்த முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. 31 வருடங்களுக்கு பின்னர் நடைபெற்ற இன்நிகழ்வு என்பதால் முன்னாள் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். விழாவின் நிறைவில் படித்த பள்ளியை மேம்படுத்தவும் இப்பள்ளி மாணவர்களின் கல்வியின் தரத்தை உயர்த்தவும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயல்பட முடிவு செய்யப்பட்டது.

# எடுத்துக்கட்டி ஊராட்சியில் ஊராட்சி நிர்வாகம் சார்பில் வைக்கப்பட்ட அறிவிப்பு பதாகை மர்ம நபர்களால் உடைத்து சேதம்



தரங்கம்பாடி, மே,30–

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, எடுத்துக்கட்டி ஊராட்சியில் எடுத்துக்கட்டி பேருந்து நிலையம் அருகில் மற்றும் எதிர் புறத்தில் வடிகால் வாய்க்கால் ஓரத்தில் கடைகள் மற்றும் வீடுகளில் இருந்து குப்பைகள் கொட்டுவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதோடு வாய்க்கால் அடைப்பு ஏற்பட்டு பாதிப்பு உருவாகும் நிலையில் ஊராட்சி நிர்வாகம் மூலம் ஊராட்சி மன்ற தலைவர் பைலட் உத்தரவின் பெயரில் வாய்க்கால் ஓரங்களில் இரண்டு அறிவிப்பு பதாகைகள் வைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அப்பகுதிகளில் குப்பைகள் கொட்ட கூடாது என எச்சரித்து அறிவிப்பு பதாகைகள் வைக்கப்பட்டு இருந்த நிலையில் இரண்டு அறிவிப்பு பதாகைகளும் சமூக விரோதிகளால் உடைத்து சேதப்படுத்தப்பட்டு கிடந்திருக்கிறது. இதனை அறிந்த எடுத்துக்கட்டி ஊராட்சி மன்ற தலைவர் பைலட் ஊராட்சி மன்ற நிர்வாகிகள் அறிவிப்பு பதாகை உடைத்து சேதப்படுத்தியது குறித்து நடவடிக்கை எடுக்க கோரி பொறையார் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். புகாரின் பேரில் அறிவிப்புவதாக உடைத்து சேதப்படுத்திய மர்ம நபர்களை போலீசார் தேடி வருகின்றனர்.

மேலும் கிராம ஊராட்சிகளில் இதுபோன்று பதாகைகளை வைப்பது அரிது அந்த வகையில் பதாகைகள் வைத்தும் சமூக விரோதிகள் இச்செயல்களை செய்திருப்பது எடுத்துக்கட்டி ஊராட்சி கிராம மக்களிடையே பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும் விரைவில் இது போன்ற சட்டவிரோதங்களை செய்யும் நபர்களை காவல்துறை தக்க நடவடிக்கை வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சீர்காழியில் டாஸ்மாக் மதுபான கடைகளை மூடிவிட்டு

# கள்ளுக்கடைகளை திறக்க கோரி வட்டாட்சியர் மூலமாக முதல்வருக்கு இந்து மக்கள் கட்சியின் சார்பில் கோரிக்கை மனு



மயிலாடுதுறை, மே,30–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் இந்து மக்கள் கட்சியின் மாநில செயலாளர் சுவாமிநாதன்தலைமையில்இந்து மக்கள் கட்சியினர் தமிழகத்தில் சமீப காலமாக கள்ளச்சாரய விற்பனை அதிகளவில் நடைபெற்று வருவதாகவும், டாஸ்மார்க் கடைகளில் போலி மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் கூறி தமிழகத்தில் பூரண மதுவிலக்கு அமல்படுத்த வேண்டும்.

கள்ளச்சாராயம் விற்பனை செய்பவர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டும். தமிழக அரசு கல் விற்பனைக்கு அனுமதி அளித்திட வேண்டும். பூரண மதுவிலக்கை அமல்படுத்தும் வரை டாஸ்மாக் கடைகளை கள்ளுக் கடைகளாக மாற்றி பனை மற்றும் தென்னை விவசாயிகளை கள் விற்பனை செய்ய அனுமதி அளிக்க வேண்டும், விவசாயிகளிடம் பெறப்படும் கள்ளை அரசே கொள்முதல் செய்து டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை மனுவினை தமிழக முதல்வருக்கு அனுப்பி வைக்குமாறு சீர்காழி வட்டாட்சியர் செந்தில்குமார் இடம் வழங்கினார்.

இதில் இந்து மக்கள் கட்சி முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.





திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்,சோழவரம் வடக்கு ஒன்றியம்,சின்னம்பேடு ஊராட்சியில் தமிழக அரசின் இரண்டு ஆண்டு கால சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார பொதுக்கூட்டம் சோழவரம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் வழுதிகை நா.செல்வசேகரன் தலைமையில் நடைபெற்றது. அனைவரையும் ஒன்றிய கவுன்சிலர் து.சந்திரசேகர் வரவேற்றார்.இதில்,சிறப்பு அழைப்பாளராக தலைமை கழக பேச்சாளர் செங்கைதாமஸ்,அவைத்தலைவர் மு.பகலவன் ஆகியோர் கலந்துகொண்டு தமிழக அரசின் 2 ஆண்டு கால சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றி பேசினர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட பிரதநிதி கோ.சகாதேவன்,முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் சி.ஜெ ரமேஷ்,எஸ். சீனிவாசன்,தான.பிரபு மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகளும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை,சோழவரம் வடக்கு ஒன்றிய திமுக செயலாளர் வழுதிகை நா.செல்வசேகரன் சிறப்பாக செய்திருந்தார்.

# காரைக்கால் மாவட்ட ஆட்சியர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் திடீர் ஆய்வு




காரைக்கால், மே,30–

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கோட்டுச்சேரியில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் மேலும் கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து ஆனையர் அலுவலகம் ஆகியவற்றை நேற்று காலை திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

முதலில் கோட்டுச்சேரியில் அமைந்துள்ள கால்நடை மருத்துவமனைக்கு சென்ற மாவட்ட ஆட்சியர் தினமும் எத்தனை கால்நடைகள் இங்கவருகின்றன என்றும் கோட்டுச்சேரி கொம்யூனுக்கு உட்பட்ட பகுதிகளில் எவ்வளவு கால்நடைகள் இருக்கின்றன என்றும் கால்நடைகளுக்கு என்னென்ன தடுப்பூசி போடுகிறீர்கள் என்றும் கேட்ட ஆட்சியர் அங்கு இருக்கும் மருத்துவர் தற்போது கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது என்று கூறினார்கள்.

மேலும் நாய்களுக்கு என்னென்ன தடுப்பூசி போடுகிறீர்கள் என்று கேட்ட ஆட்சியர் அதற்கு வெறிநாய்கடி தடுப்பூசி போடப்பட்டு வருகிறது என்று டாக்டர் கூறினார்கள். மேலும் மருந்துகள் இருப்பு வைக்கும் இடத்தை ஆய்வு மேற்கொண்ட ஆட்சியர் குளிர் சாதன பெட்டிகள் இயங்குகிறதா என்பதையும் ஆய்வு மேற்கொண்டார். மேலும் ஊழியர்களின் வருகை பதிவேட்டை பார்வையிட்ட ஆட்சியர் அனைவரும் பணிக்கு குறித்த நேரத்தில வருகிறார்களா என்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் டாக்டர். கிருத்திகா மற்றும் ஊழியர்கள் உடன் இருந்தார்கள். மேலும் கோட்டுச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அங்கு பணியில் இருக்கும் மருத்துவரிடம் ஏதேனும் குறைகள் உள்ளனவா என்று கேட்டறிந்தார். மேலும் அனைத்து இடங்களையும் பார்வையிட்ட ஆட்சியர் ஹாஸ்பிடலுக்குபின்புறம் குப்பைகள் இருப்பதை பார்வையிட்டு உடனடியாக சம்பந்தப்பட்டவர்களை தொடர்பு கொண்டு 100 நாள் வேலை திட்டத்தில் இப்பணியைஉடனடியாக சுத்தம் செய்யுமாறு கொம்யூன் பஞ்சாயத்து நிர்வாகத்தை கேட்டுக் கொண்டார்கள்.

மேலும் ஹாஸ்பிடலுக்கு அருகில் இருக்கும் நாய்களை அப்புறப்படுத்துமாறும் சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக் கொண்டார். பிறகு கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து அலுவலகத்தை பார்வையிட்ட ஆட்சியர் வருகை பதிவேட்டை பார்வையிட்டு பணிக்கு வராதவர்கள்நேரில்வந்து விளக்கம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார். மேலும் அருகில் உள்ள குமரப்பிள்ளைவீதிசாலை அமைக்கும் பணியையும் பார்வையிட்டார்.

# வாய்க்கால் பிரச்சினை முறையிட்ட விவசாயிகள், உடனே கலத்திற்கு நேரில் சென்று விசாரித்த கலெக்டர்





காரைக்கால், மே,30

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் விழுப்புரம் டூ நாகப்பட்டினம் வரை நான்கு வழிச்சாலைகள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த பணி காரைக்கால் மாவட்டத்தில் நண்டலாறில் ஆரம்பித்து நிரவி பகுதி வரை 14 கிலோ மீட்டர் தூரம் நமது பகுதியில் இப்பனி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனிடையில் பிள்ளை தெரு வாசல் பகுதியில் காரைக்கால் வாய்க்கால் குறுக்கே ரோடு போட்டதின் காரணமாக வாய்க்கால் தடைப்பட்டு உள்ளது.

இதை அறிந்த காரைக்கால் பிரதேச விவசாயிகள் நல சங்கம் சார்பில் விவசாய பெருமக்கள் நேற்று காலை காரைக்கால் மாவட்ட ஆட்சியரை சந்தித்து தமிழகத்திலிருந்து நமது பகுதிக்கு காவிரி இரண்டு வாரங்களில் தன்னீர் நமது பகுதிக்கு திறந்து விட உள்ளார்கள் என்றும் அதற்குள் இந்த பணியை முடித்து தர வேண்டும் என்றும் இதன் காரணமாக இந்த வாய்க்கால்கள் மூலம் விளை நிலங்கள் பாதிக்கப்படாமல் பாசன வசதி பெறும் என்றும் முறையிட்டார்கள். இதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அந்த பகுதியை பொதுப்பணித்துறை அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது கூறிய பொதுப்பணித்துறை அதிகாரிகள் இந்த இடத்தில் ஏற்கனவே பாலம் கட்ட அனுமதி கேட்டுள்ளார்கள் என்றும் நாம் அனுமதி அளித்துள்ளோம் என்றும் கூறிய செயற்பொறியாளர் கூறினார். மேலும் அந்த இடத்திற்கு வந்த நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் இது தற்சமயம் பொருட்கள் கொண்டு செல்ல தற்காலிகமாக நாங்கள் ரோடு போட்டு உள்ளோம் என்றும் இப்பனி முடிந்தவுடன் அந்த இடத்தில் பாலம் கட்டி தரப்படும் என்றும் கூறினார்.

மாவட்ட ஆட்சியர் காவிரி நீர் திறந்து விடும் நேரம் வருவதால் வரும் பத்தாம் தேதிக்குள் பாலம் கட்டும் பணியை கட்டி முடித்து தருமாறும் இல்லையெனில் தண்ணீர் போவதற்கு வசதியாக திறந்து விடுமாறும் கேட்டுக் கொண்டார். அதற்கு அவர்களும் செய்கிறோம் என்று உறுதி அளித்தார்கள். மேலும் நமது பகுதியில் இந்த நாலு வழி சாலை அமைக்கும் பணியில் வேறு எங்காவது வாய்க்கால்கள் தடைபட்டுள்ளதா என்பதையும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க ஆட்சியர் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்நிகழ்வில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் மகேஷ் மற்றும் உயர் அதிகாரிகள் விவசாய பெருமக்கள் தேசிய நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# புதுக்கோட்டை சாய் சரவணா அகாடெமி நடத்தும் இரண்டாவது சர்வதேச ரேட்டிங் செஸ் போட்டி நடைபெற்றது

புதுக்கோட்டை ,மே.30-

புதுக்கோட்டை சாய் சரவணா அகாடெமி நடத்தும் இரண்டாவது சர்வதேச ரேட்டிங் செஸ் போட்டி புதுக்கோட்டை லேனா விலக்கில் உள்ள செந்தூரான் பொறியியல் கல்லூரியில் தொடங்கியது. இப்போட்டியின் தொடக்க விழாவில் புதுக்கோட்டை மாவட்ட செஸ் சங்கத்தலைவர்

தொழிலதிபர். எஸ். ராமசந்திரன் தலைமை வகித்தார், செயலர் பேராசிரியர் கணேசன் அனைவரையும் வரவேற்றார், போட்டியை திமுக மாநில மருத்துவ அணி துணைச்செயலாளர் அண்ணாமலை ரகுபதி தொடங்கி வைத்தார்.




செந்தூரான் கல்வி நிறுவனங்களின் தாளாளர்கள். செல்வராஜ், வயிரவன், கார்த்திக், சாய் சரவணா அகாடமி நிறுவனர்கள் அங்கப்பன் மற்றும். அடைக்கலவன், சர்வதேச செஸ் நடுவர்கள் தினகரன், ஆனந்தபாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், இந்நிகழ்வில் பாலு, சிவா, சையது மற்றும் புதுக்கோட்டை மாவட்ட செஸ் சங்க பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் 400க்கும் மேற்பட்ட செஸ் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர், இப்போட்டி ஐந்து நாட்கள் நடை பெறுகிறது.

# விழுப்புரம் அருகே சாலையோர பள்ளத்தில் தனியார் பேருந்து கவிழ்ந்து விபத்து – 30–க்கும் மேற்பட்டோர் காயம்

விழுப்புரம் மே 30

விழுப்புரம் மாவட்டம் பஞ்சமாதேவி என்ற இடத்தில், தனியார் பேருந்து ஒன்று சாலையோர பள்ளத்தில் பலத்த சத்தத்துடன் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதனால் பேருந்தில் இருந்தவர்கள் அபய குரல் எழுப்பினர். பேருந்து விபத்தில் சிக்கியதை அறிந்த அப்பகுதி மக்கள் விரைந்து சென்று பேருந்தில் சிக்கியவர்களை மீட்டனர்.

இந்த விபத்தில் 30-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.



காயமடைந்தவர்கள் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இதில் பேருந்தில் பயணம் செய்த பெண் ஒருவருக்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பேருந்து திண்டிவனத்திலிருந்து நெய்வேலி சென்ற போது பஞ்சமாதேவி என்ற இடத்தில் எதிரில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதாமல் தவிர்க்க முயன்ற போது, டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த விபத்தால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# மதுரை மாவட்டம் கோ. புதூரில் கிறிஸ்தவ ஒன்றிப்பு மாநாடு பெந்தகோஸ்தே ஞாயிறு 2023 நடைபெற்றது

மதுரை,மே.30-

பெந்தகோஸ்தே ஞாயிறு 2023 கிறிஸ்தவ ஒன்றிப்பு மாநாடு மதுரை மாவட்டம் மூன்று மாவடி, கோ. புதூரில் உள்ள சி. எஸ். ஐ மைதானத்தில் நடைபெற்றது

மாநாட்டில் ஜெஸ்லர் ராய் வரவேற்புரை ஆற்றினார் , ஆனந்தம் நோக்க உரை ஆற்றினார், மேலும் சி.எஸ்.ஐ பொதுச் செயலர் மற்றும் வழக்கறிஞர் பெர்னாண்டஸ் ரத்தின ராஜா ,ஜோசப் பாலச்சந்திரன், மேலும் கிறிஸ்தவநல்லெண்ண இயக்க நிறுவனத் தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினருமான இனிகோ இருதயராஜ் ஆகியோர், மேலும் தமிழ்நாடு



சிறுபான்மை ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் சி. எஸ். ஐ பேராயர் ஜெய்சிங் பிரின்ஸ் பிரபாகரன் ஆசியுரை வழங்கினார், மேலும் மதுரை உயர்மறை மாவட்டம் ஆர். சி பேராயர் அந்தோணி பாப்பு சாமி ,மோகன் சி. லாசரஸ் ஆகியோர் கலந்து கொண்டனர், மாநாட்டின் இறுதியாக சகோதரர் மனுவேல் ஜெயராஜ் மற்றும் நிகழ்ச்சி தொகுப்பினை ஜே. பெண்டிட் பர்ன பாஸ் ஆகியோர் கலந்துகொண்டு மாநாட்டினை சிறப்பித்தனர், மற்றும் சிலுவை மாமன்ற உறுப்பினர் எஸ் .எஸ். போஸ், ஆகியோர் கலந்து கொண்டனர், மேலும் டேனியல் தங்கராஜ், பால் ஜோசப் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மாநாட்டினை சிறப்பித்தனர்.

# சென்னையில் மாநகரப் போக்குவரத்து ஊழியர்கள் திடீர் ஸ்டிரைக் பஸ் கிடைக்காமல் மக்கள் அவதி

சென்னை , மே. 30-

தனியார் ஏஜென்சிகள் மூலம்போக்குவரத்துதுறையில் ஆட்கள் சேர்க்கும் தமிழக அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து சென்னையில் உள்ள 33 போக்குவரத்து பணிமனைகளில் உள்ள போக்குவரத்து ஊழியர்கள் நேற்று மாலை திடீர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பேருந்துகள் நிறுத்தப்பட்டதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தனியார் ஏஜென்சிகள் மூலம்,போக்குவரத்துதுறையில் ஆட்கள் சேர்க்கும் தமிழக அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்து சென்னையில் உள்ள 33 போக்குவரத்து பணிமனைகளில் உள்ள சென்னை மாநகரப் போக்குவரத்து ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்த திடீர் போராட்டத்தின் காரணமாக, சென்னையின் மாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் ஆங்காங்கே பேருந்துகள் நிறுத்தப்பட்டதால், பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். தாம்பரம், பூந்தமல்லி, ஆவடி உள்ளிட்ட பகுதிகளிலும், பல்லவன் இல்லம், சைதாப்பேட்டை மற்றும் ஆலந்தூர் உள்பட சென்னையில் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் வரும் 33 பணிமனைகளிலும் போக்குவரத்து பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவுட்சோர்ஸிங்முறையில் அரசுப் போக்குவரத்துக் கழகத்துக்கு ஆட்கள் பணியமர்த்தப்படுவதை அனுமதிக்க மாட்டோம், போக்குவரத்துக் கழகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருக்கும் தமிழகத்தைச் சேர்ந்த பட்டியலினத்தவர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டத்தில் போக்குவரத்து தொழிலாளர்கள் ஈடுபட்டனர்.

மாலை நேரத்தில் நடந்த இந்த திடீர் போராட்டத்தின் காரணமாக சென்னையில் பேருந்து போக்குவரத்து முற்றிலுமாக முடங்கியது. பணிக்குச் சென்று திரும்பும் பெண்கள், இளைஞர்கள், முதியோர் உட்பட பொதுமக்கள் பலரும் வெகுவாக பாதிக்கப்பட்டனர்.

# சங்கரன்கோவிலில் இன்று திமுக செயற்குழு கூட்டம்

தென்காசி,மே.30-

தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் புளியங்குடி தனியார் மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் மாவட்ட அவை தலைவர் பத்மநாபன் தலைமையில் நடக்கிறது. புளியங்குடி நகரச் செயலாளர் அந்தோணிச்சாமி வரவேற்புரை ஆற்றுகிறார், என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம். எல். ஏ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தென்காசி வடக்கு மாவட்ட



திமுக செயற்குழு கூட்டம் புளியங்குடி தனியார் திருமண மண்டபத்தில் இன்று 30 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் மாவட்ட அவைத் தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது. புளியங்குடி நகரச் செயலாளர் அந்தோணிசாமி வரவேற்புரையாற்றுகிறார். இதில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா மற்றும் திமுக ஆக்கப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளதாகவும், கூட்டத்தில் மாவட்டக் திமுக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், திமுக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்ள வேண்டுமென அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

# ஆந்திர பெட்ரோல் பங்க் எண்ணெய் தொட்டியில் விழுந்து 3 பேர் உயிரிழப்பு

ஆந்திரா மே 30

ஆந்திர மாநிலம் அண்ணமையா மாவட்டம் ராயசோட்டி நகரில் பெட்ரோல் பங்க் உள்ளது. இந்த பெட்ரோல் பங்க்கில் உள்ள எண்ணெய் சேமிக்கும் தொட்டியை 6 மாதங்களுக்கு ஒருமுறை சுத்தம் செய்வது வழக்கம்.

அந்த வகையில் எண்ணெய் தொட்டியை சுத்தம் செய்வதற்காக 3 பேர் பெட்ரோல் பங்கிற்கு வந்துள்ளனர். அப்போது தொட்டியில் முதலில் இறங்கிய நபர் கால் தவறி உள்ளே விழுந்துவிட்டார். இதனை கண்டு அதிர்ச்சியடைந்த நண்பர்களான இருவர், கிழே விழுந்த நபரை காப்பாற்றுவதற்காக கீழே இறங்கினர். ஆனால் அவர்களும் உள்ளே விழுந்ததில் மூவருக்கும் மூச்சுத்திணறல் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து



பெட்ரோல் பங்க் ஊழியர்கள் உடனடியாக தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு துறையினர் மற்றும் போலீசார், மூவரையும் பெரும் போராட்டத்திற்கு பிறகு தொட்டியில் இருந்து மீட்டனர்.

அவர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் இருவர் மருத்துவமனைக்கு செல்லும் வழியில் உயிரிழந்தனர். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதி மக்களுக்கு பெரும் சோகத்தை எற்படுத்தியது.



▶ மதுரை டி.பி.கே மெயின் ரோடு பசுமலை அருகில் தேவா பிசியோதெரபி கிளினிக் திறப்பு விழா நடைபெற்றது. விழாவை முன்னிட்டு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில் முதுகு வலி, மூட்டு வலி, கழுத்து வலி, தோள்பட்டை வலி, நரம்பியல் பிரச்சனை போன்ற இலவச சிகிச்சை மற்றும் மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது. விழாவில் டாக்டர் திருக்குமரன், டாக்டர் விமலா, டாக்டர் ஜேம்ஸ், டாக்டர் பிரியதர்ஷினி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கர்நாடகாவில் கோர விபத்து குழந்தைகள் உள்பட 10 பேர் பலியான சோகம்



மைசூர், மே. 30-

மைசூருவுக்கு சுற்றுலா சென்றபோது விபத்தில் சிக்கி உள்ளனர். இறந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கர்நாடகா மாநிலம் மைசூர்-கொள்ளேகால் சாலையில் நேற்று பேருந்தும், காரும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த பயங்கர விபத்தில் கார் முற்றிலும் நொறுங்கியது. காரில் இருந்த 2 குழந்தைகள் உள்பட 10 பேர் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இறந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விபத்தில் இறந்தவர்களில் சிலர் பெல்லாரி சங்கனக்கல் பகுதியை சேர்ந்தவர்கள், இவர் பெல்லாரி ஊரகத் தொகுதியில் உள்ள சங்கனக்கல்லில் இருந்து மைசூருவுக்கு சுற்றுலா சென்றபோது விபத்தில் சிக்கி உள்ளனர்.

# செங்கோல் குறித்து முதல்வர் ஸ்டாலின் பேசுவது சரியல்ல புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை

புதுச்சேரி

"செங்கோல் பற்றி சொல்பவர்கள் அதன் உண்மைத் தன்மை புரியாதவர்களாகத்தான் இருக்கிறார்கள்" என்று புதுச்சேரிதுணைநிலைஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி கருவடிக்குப்பம் குரு சித்தானந்தா கோயிலில் 186-வது குரு பூஜை விழா நேற்று நடைபெற்றுது. இதில் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து அன்னதானத்தை தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "புதிய நாடாளுமன்றத்தில் செங்கோல் நிறுவப்பட்டுள்ளது. தமிழின் செல்கோலுக்கு இவ்வளவு மரியாதை, அங்கீகாரம் கொடுத்த பிறகு தமிழகத்தில் இருந்து யாரும் புறக்கணித்திருக்கக் கூடாது. இதில் எதிர்கட்சியினர், சில அரசியல்வாதிகள் அரசியல் செய்கின்றனர்.

தமிழகத்தில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றது. தமிழுக்கு பெருமை சேர்க்கும் என நினைத்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், வாக்கிங் ஸ்டிக்காக முடங்கி சிறுமைப்பட்டு இருந்ததை



பெருமைப்படுத்தி இருக்கிறார்கள். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் செங்கோல் முதல் நாளே வளைந்துவிட்டது என்று கூறியுள்ளார். அவர் இப்படி பேசுவது சரியானதல்ல. எவ்வளவு மாற்றுக் கருத்து இருந்தாலும், தமிழர்களின் செங்கோலை அரசியலாக்கி இருக்கக் கூடாது. இப்படி ஒரு முயற்சியை நாம் மேற்கொள்ளவில்லை என்றால் வருங்காலத்தில் செங்கோலின் அருமை பெருமை மறைந்து போயிருக்கும்.

எந்த மாநிலத்துக்கும், எந்த மொழிக்கும் கிடைக்காத மரியாதை நமக்கு கிடைத்திருக்கிறது. புதிய நாடாளுமன்ற கட்டிடத் திறப்பு விழாவில் காலை தமிழ் மட்டுமே ஒலித்தது. தமிழ் ஆதீனங்கள் மட்டும்தான் அங்கு இருந்தனர். அவர்களுக்கு கிடைத்த மரியாதை தமிழுக்கு கிடைத்த மரியாதை. மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் கூட தமிழ் மாநிலத்துக்கு கிடைத்த அங்கீகாரத்தை பார்த்து மகிழ்கின்றனர்.

ஆனால், தமிழகத்தைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் கருப்புக் கொடி காட்டுகின்றனர். ஏற்றுகின்றனர். கள்ளச் சாராய மரணங்கள் வரும்போது கருப்புக் கொடி ஏற்றவில்லை. தமிழர்களின் அடையாளம் நிலைநாட்டும்போது கருப்புக்கொடி ஏற்றுகின்றனர். அப்படியானால் இவர்களின் அடையாளத்தை மக்கள் புரிந்து கொள்வார்கள். திருவள்ளுவர் கூட செங்கோல் என்பது மக்களாட்சியின் ஓர் அடையாளம் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, செங்கோல் பற்றி சொல்பவர்கள் எல்லோரும் அதன் உண்மைத் தன்மை புரியாதவர்களாகத்தான் இருக்கிறார்கள்" என்றார்.

அப்போது புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி, ஆளுநர் மீதான ஊழல் பட்டியலை வெளியிடுவேன் என்று சொல்லியுள்ளாரே என செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு ஆளுநர், "ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் அதிகாரிகள் அதைப்பற்றி சொல்வார்கள். நாராயணசாமி சொல்லிய குற்றச்சாட்டுக்கு நான் சிரிக்கத்தான் செய்வேன்" என்று தெரிவித்தார்.

# ஆரணி பேரூர் இளைஞர் அணி திமுக சார்பில் இரண்டு ஆண்டு கால சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார பொதுக்கூட்டம்

ஊத்துக்கோட்டை,மே30-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம்,சோழவரம் வடக்கு ஒன்றியம்,ஆரணி பேரூர் இளைஞர் அணி சார்பில் இரண்டு ஆண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டம் ஆரணி ராமர் கோவில் அருகே நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து தலைமை தாங்கினார். அனைவரையும் ஆரணி பேரூர் திமுக இளைஞரணி அமைப்பாளர் ஜி.ஆர். பார்த்திபன் வரவேற்றார்.

முன்னாள் பேரூர் செயலாளர்கள் ஜி.பி. வெங்கடேசன், டி.கண்ணதாசன், அவைத்தலைவர் ஜி.ரமேஷ், பேரூர் துணைச்செயலாளர்கள் வழக்கறிஞர் டி.கோபிநாத்,டி. நிலவழகன், ஆர்.கலையரசி, பேரூர் பொருளாளர் கு.கரிகாலன், முன்னாள் அவைத்தலைவர் டி.எஸ். குருவப்பா, மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் ஏ.பாலமுருகன், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் டி.ஜெயக்குமார்,



மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் டி.தமிழழகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வே.ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில்,மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வழக்கறிஞர் வெ.அன்புவாணன்,தலைமை கழகப் பேச்சாளர் மதுரை சேவியர்,டி.ஜே.எஸ்.பப்ளிக் பள்ளியின் தாளாளர் டி.ஜே. ஜி.மனோஜ்தமிழரசன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு கால சாதனைகளை விளக்கி சிறப்புரை ஆற்றி பேசினர். இதன் பின்னர்,நெசவாளர் அணியின் புதிய நிர்வாகிகளை கௌரவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிகளில்,மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமாமகேஸ்வரி,பொதுக்குழு உறுப்பினர் குணசேகரன் நிர்வாகிகள் சாய்சத்தியம், நீலகண்டன், தக்காளி ரவி, வக்கீல் ஜெகநாதன்,திருமலா எஸ். சேகர்,வாட்டர் எஸ்.பாலு, வி.கே.எம்.ரியல் எஸ்டேட் விஜயகுமார் உள்ளிட்ட மாவட்ட,ஒன்றிய,பேரூர், கிளைகழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள்,உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முடிவில், ஆரணி பேரூர் திமுக இளைஞர் அணிதுணை அமைப்பாளர்கள் டி.தமிழ்செல்வன், கே. ஈஸ்வரய்யா,எம்.ரோகித்குமார் ஆகியோர் நன்றி கூறினர்.

# குளத்து நீரை பயிருக்கு மட்டுமே பாய்ச்ச வேண்டுமென்ற உத்தரவுடன் தொண்டைமான் கல்வெட்டு கந்தர்வகோட்டை அருகே கண்டுபிடிப்பு

**கந்தர்வகோட்டை , மே. 30-**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை எல்லையில் , புதுக்கோட்டை வட்டம் கல்லுக்காரன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட சம்பட்டிப்பட்டி சிற்றூர் எல்லையில் கல் பலகை நட்டிருப்பதாக குரும்பூண்டியைச்சேர்ந்த சமூக ஆர்வலர் மூ.சேகர் அளித்த தகவலின் பேரில் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக தொல்லறிவியல் துறை ஆய்வாளர் ஆ. மணிகண்டன் கல்வெட்டை ஆய்வு செய்ததில் திருமலை ராய தொண்டைமான் பெயரில் , 1758 ஆம் ஆண்டு பிரம குளத்தில் பயிருக்கு மட்டும் நீர்ப்பாய்ச்சும் பாசன உரிமையுடன் , பிரமன் வயல் நிலத்தை சறுவமானியமாக கொடுத்த தகவலடங்கிய கல்வெட்டு என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு குறித்து ஆ. மணிகண்டன் கூறியதாவது ,

கந்தர்வகோட்டை எல்லையிலுள்ள கொத்தகம் அருகே, புதுக்கோட்டை வட்டம் கல்லுக்காரன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட, சம்பட்டிப்பட்டி சிற்றூர் எல்லையிலுள்ள , எல்லைக்கல் வயலில் வாமன கோட்டுருவமும் , எல்லைக்கல்லிற்கும் வட மேற்கிலுள்ள புதரில் கல்வெட்டு பலகைக்கல் நட்டுவிக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டின் காலம் :**

சாலிவாகன சகாப்தம் 1679 , கலியுகம் 4858 என்றும், வெகுதானியவருடம் ஆவணி மாதம் மூன்றாம் திகதி என குறிப்பிடப்பட்டுள்ளது . இதற்கு இணையான பொது ஆண்டாக 1758 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் தேதி என கணிக்கலாம் . இந்த காலக்கட்டத்தில் விசைய ராகுநாதராயத் தொண்டைமானர் ஆட்சி பொ. ஆ 1730 முதல் 1789 வரை நிலவியது.

**கல்வெட்டில் உள்ள தகவல் :**

ஐந்தரை அடி உயரத்துடன் ஒன்றே கால் அடி அகலத்துடன் உள்ள பலகைக்கல்லின் இருபுறமும் 80 வரிகளுடன் எழுத்து பொறிப்பு ஸ்வஸ்தி ஸ்ரீ என்ற மங்கள சொல்லுடன் தொடங்குகிறது , சாலிவாகன ஆண்டு மற்றும் கலியாண்டுடன் வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 3 ஆம் நாள் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதில் தொண்டைமான் மன்னர்களின் பூர்வீகம் குறித்த தகவலாக ராசராச வளநாடு , ராசேந்திர சோழ வள நாடு , பன்றி சூழ் நாடு, அன்பில் எனப்படும் அம்புக்கோவில் தெற்கிலூரில் காணியுடையார் மக்களில் திருமலைராய தொண்டைமானர் அவர்களின் பஞ்ச நத்தத்திலிருக்கும் என்ற



சொற்றொடரில் உள்ள தகவல் தொண்டைமான் மன்னர்களின் பூர்வீகமாக அம்புக்கோவிலை குறிப்பிடுவதை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இவ்வூரில் இருக்கின்ற பகவாந் ராயர் மற்றும் ராசிவராயர் ஆகியோருக்கு, சம்பட்டிப்பட்டி சிற்றூர் எல்லையில் அமைந்துள்ள பிரமன் வயலை சறுவ மானியமாக வழங்கிய மன்னரின் உத்தரவு தாமிரத்தில் எழுதி சாசனமாக்கப்பட்டதையும் , வழங்கப்பட்ட நிலத்தின் நான்கு புற எல்லைகளாக கிழக்கு எல்லையாக கீழக் காட்டுக்கு மேற்கு எனவும் , தென் புறத்தில் புளியடிக்கு வடக்கு எனவும் , மேற்கு பாக்கெல்லையாக மொந்தைக்கு கிழக்கு எனவும் வட பாக்கெல்லையாக கொத்தகத்து வயலுக்கு தெற்கு எனவும் வரையறுக்கப்பட்டு இந்தபெரு நான்கெல்லைக்குட்பட்ட நஞ்சையும் , புஞ்சையும் , பிரம குளத்தின் நீரை பயிருக்காக மட்டும் பாய்ச்ச வேண்டும் உத்தரவுடன், இந்த சாசனத்திற்கு இடையூறு செய்வோர் பல தோஷத்திற்கு ஆளாவர்கள் என்று எச்சரிக்கை விடுத்துள்ள கல்வெட்டுப்பகுதி முழுமையாக வாசிக்க இயலாத நிலையில் உள்ளது . இறுதியாக தொண்டைமான் மன்னர் சார்பாக பழனியப்ப வாத்தியார் என்பாரின் ஒப்பத்துடன் "ஸ்ரீ ராம செயம்' என கல்வெட்டு நிறைவுறுகிறது.

**வாமன கோட்டுருவம் பொறிக்கப்பட்ட எல்லைக்கல்**

தற்போது கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு அருகிலேயே தனியாருக்கு சொந்தமான நிலத்தில் இந்த வாமன கோட்டுருவம் நட்டு வைக்கப்பட்டுள்ளது. இது கல்வெட்டிலுள்ள எல்லையை குறிப்பதற்காக நடபட்டதை உறுதி செய்கிறது . இது தொண்டைமான் மன்னர்களின் தனித்துவ குறியீடாகும், தொண்டைமான் செப்பு பட்டயங்களில் வாமன கோட்டுருவம் வடிக்கப்பட்டுள்ளதை இதனுடன் ஒப்புநோக்கலாம்.

**சறுவ மானியம் வழங்கியது யார் ?**

திருமலை ராய தொண்டைமான் (பொ. ஆ. 1729 ) மறைவுக்குப் பிறகு பொ.ஆ. 1758 ஆம் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. தொண்டைமான் மன்னர்களில் 1730 ஆண்டு முடி சூட்டிக்கொண்ட விசைய ராகுநாத ராய தொண்டைமான் பொ. ஆ. 1730 ஆம் ஆண்டு தொடங்கி பொ. ஆ. 1790 வரை ஆட்சி புரிகிறார் என்பதால் இக்காலத்தில் ,தனது தந்தையாரின் நினைவாக இந்த இந்த சறுவ மானியத்தை வழங்கியிருப்பதோடு தனது பெயரை இக்கல்வெட்டில் குறிப்பிடவில்லை என்பது நோக்கத்தக்கது மேலும் இந்த சறுவமானியத்தை திருமலை ராய தொண்டைமானுக்காக பழனியப்ப வாத்தியார் என்பவர் ஒப்பமிட்டு வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. என்றார் .

இந்த ஆய்வின் போது தொன்மை பாதுகாப்பு மன்றத்தின் உறுப்பினர்கள் ஜனார்த்தனன், குமரேசன் , உள்ளூர் ஆர்வலர் சாகுல் ஹமீது ஆகியோர் உடனிருந்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# முதல்வருக்கு புதுகையில் பாராட்டு : 6 பேர் அமைச்சர்கள் குழு நேரில் ஆய்வு

# ஜந்தர் மந்தரில் போராட்டம் மல்யுத்த வீராங்கனைகளுக்கு அனுமதி கட்





# கர்நாடகாவில் சுற்றுலா வாகனம் விபத்து 10 பேர் உயிரிழப்பு


| சென்னை / புதுக்கோட்டை | 30.05.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சுந்தர ராமசாமி , தமிழக எழுத்தாளர் (பி.1931) (இ.2005)



ஜக்மோகன் டால்மியா , இந்தியத் துடுப்பாட்ட நிருவாகி (பி.1940) (இ.2015)



வி. நாராயணசாமி , இந்திய அரசியல்வாதி, புதுச்சேரி ஒன்றியப் பகுதியின் முன்னாள் முதலமைச்சர் (பி.1947)



கே. எஸ். ரவிகுமார் , தென்னிந்தியத் திரைப்பட இயக்குனர், நடிகர் (பி.1958)



## இன்றைய நினைவு நாள்

பாம்பன் சுவாமிகள் , தமிழகப் புலவர் (பி.1850) (இ.1929)



பாலக்காடு டி. எஸ். மணி ஐயர் , தென்னிந்திய மிருதங்கக் கலைஞர் (பி.1912) (இ.1981)



ஜயலத் ஜயவர்தன , இலங்கை மருத்துவர், அரசியல்வாதி (பி.1953) (இ.2013)

